1979 பிப்ரவரி 24]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிராந்தியப் படி வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டும், கோவை மாவட்டம் பரளி மின்நிலைய பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை. அரசு உத்தரவிட்ட பின்பும் வழங்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக்கேள்வி போடவும்.

ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியிடமிருந்து உள்ளூர் மேல்வரி வசூலித்தல்.

*வினா எண். 164—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியார் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூர் மேல் வரி (லோகல் சர்சார்ஜ்) பாக்கி எவ்வளவு?

(ஆ) அதனை வசூலிக்க எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ரூ. 40,10,268·36.

(ஆ) தலைமை நீதிமன்றம், முக்கியப் பிரச்சினை குறித்து இறுதி முடிவுகள் எடுக்கும்வரை, உள்ளூர் மேல்வரி நிலுவைத் தொகைகளை வசூலிப்பதிலிருந்து அரசைத் தடைசெய்யும் வகையில் சென்னை உயர்நீதி மன்றத்தில்—கம்பெனி பல மனுக்களைத் தாக்கல் செய்து, தடை ஆணைகளையும், உறுத்துக் கட்டளைகளையும் (Injection) பெற்றுள்ளது.

[முற்பகல் 9·40]

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுடைய உள்ளூர் மேல் வரி நீதிமன்றத்தில் தடை காரணமாக தடைப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த நடப்பாண்டில் புறம்போக்கு இடங்களில் கல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்போது நடைமுறையில் இருக்கிற விதிப்படி உள்ளூர் மேல் வரி வசூல் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நிச்சயமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.